ප්‍රවාහන අමාත්‍යාංශය
போக்குவரத்து அமைச்சு
Ministry of Transport



කාර්යසාධන වාර්තාව
செயல்நிறைவேற்று அறிக்கை
Performance Report

2021

7 වෙනි මහල, සෙත්සිරිපාය - අදියර II, බත්තරමුල්ල
7 ஆவது மாடி, செத்சிறிபாய - II ஆம் கட்டம், பத்தரமுல்லை
7th Floor, Sethsiripaya - Stage II, Battaramulla



போக்குவரத்து அமைச்சு

2021ஆம் ஆண்டின் செயல்நிறைவேற்று அறிக்கை

7 ஆவது மாடி
செத்சிறிபாய - IIஆம் கட்டம்
பத்தரமுல்லை

2022 – ஜூன்

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு 3

1.1 அறிமுகம் 3

1.2 அமைப்பின் தொலைநோக்கு , பணிக்கூற்று மற்றும் நோக்கங்கள் 4

1.3 பிரதான செயற்பாடுகள் 5

1.4 அமைச்சின் நிறுவன விளக்கப்படம் 6

1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் 7

1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் 7

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (இருப்பின்) 7

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலகண்ணோட்டம் 8

அத்தியாயம் 03 - வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை 2021 11

3.1 நிதிச்செயலாற்றுகைப்பற்றியகூற்று 11

3.2 நிதிநிலைமை பற்றிய கூற்று 13

3.3 காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று 14

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 15

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை 15

3.6 ஒதுக்கீட்டுப்பயன்பாட்டின் செயலாற்றுகை 15

3.7 நீ.பி.குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்டச்செயலகம்/ மாகாணசபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு 16

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை 16

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை** 16

அத்தியாயம் 04 - செயலாற்றுகைசுட்டிகள் 17

4.1 நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத்திட்டத்தின் அடிப்படையில்) 17

அத்தியாயம் 05 –பேண்தகு அபிவிருத்திஇலக்குகளை (SDG) அடையும்செயலாற்றுகை 18

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக 18

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக 18

அத்தியாயம் 06–மனிதவள விபரம் 21

6.1 பதவியணி முகாமைத்துவம் 21

6.2 பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனிதவளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக 21

6.3 மனிதவள அபிவிருத்தி 21

அத்தியாயம் 07 –இணக்க அறிக்கை 22

அத்தியாயம் 01

1.1 அறிமுகம்

ஒரு நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்ந்தும் பேணுவதற்காக முறையான போக்குவரத்து முறைமையொன்று இருப்பது அவசியமானதாகும்.நாளுக்கு நாள் அதிகரித்து வரும் போக்குவரத்து தேவையை எதிர்கொள்ளும் வகையில் எழுந்துள்ள பல்வேறு பிரச்சனைகளை தீர்ப்பதற்காக முன்னுரிமை அளித்து "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை பிரகடனத்துக்கு அமைவாக நவீன தொழில்நுட்ப முறைகளை பின்பற்றி அதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி செயல்முறையை பேணுவது போக்குவரத்து அமைச்சின் பரந்த நோக்காக அமைந்துள்ளது.

அதிகரித்து வரும் போக்குவரத்து தேவையை எதிர்கொள்ளும் வகையில், பொதுப் போக்குவரத்துச் சேவைகளின் வினைத்திறன் மற்றும் போதியளவில் வசதிகள் இல்லாமையின் காரணமாக அதன் மூலம் பயணிகள் போக்குவரத்திற்காக வழங்கப்படுகின்ற துறைவாரியான பங்களிப்பு வேகமாகக் குறைவடைந்து வருகின்றது. கொவிட் தொற்றுநோய் காரணமாக, மக்கள் பொது போக்குவரத்திலிருந்து மேலும் விலகிச் செல்லும் போக்கு காணக்கூடியதாக உள்ளது. இதன் விளைவாக, தனியார் போக்குவரத்துத் துறையின் பங்களிப்பு சமீபத்திய ஆண்டுகளில் வேகமாக அதிகரித்திருப்பதுடன் வீதிகளில் ஓடும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கேற்ப வீதிகள் கொள்திறனை அதிகரிப்பதற்குரிய வரம்புகள் உள்ளதால், ஏற்பட்டிருக்கின்ற அதிக போக்குவரத்து நெரிசலை நிவர்த்தி செய்வதற்காக அறிவுத்திறன் வாய்ந்த போக்குவரத்து முகாமைத்துவம், (Intelligent Transport Systems) போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் எதிர்காலத்தில் அவற்றை திறம்பட செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை புகையிரத சேவையின் மூலம் பயணிகள் போக்குவரத்திற்காக குறிப்பிடத்தக்க பங்களிப்பை கிடைப்பதுடன் அந்த நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில் மஹவ-ஓமந்தை புகையிரத பாதையின் புனரமைப்பு பணிகள், தெற்கு பயாகலை-அளுத்காமம் மற்றும் பொல்கஹவெல-குருணாகல் இரட்டைப் பாதைகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தினசரி கொழும்புக்கு பயணிக்கும் பயணிகளின் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் கொழும்பு புறநகர் புகையிரத சேவையை மேம்படுத்தும் நோக்கில் வீதி அமைப்பு, வீதி சமிஞைகள், புகைவண்டிப் பெட்டிகள் மற்றும் என்ஜின்களை பழுதுபார்ப்பதற்காக முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் போக்குவரத்து துறைக்கு அதிக பங்களிப்பை வழங்கின்ற பொது போக்குவரத்து பேருந்து சேவைக்காக நவீன தொழில்நுட்பத்தின் அறிமுகத்தின் அடிப்படையில் எளிதான மற்றும் நம்பகமான முன்கொடுப்பனவு அட்டை முறையை அறிமுகப்படுத்துதல், கையடக்கத்தக்க தொலைபேசி மற்றும் இணையத்தினூடாக பேருந்து சேவைகள் பற்றிய தகவல்களை பெறல் மற்றும் ஆசனங்களை முன்பதிவு செய்து கொள்வதற்காக மென்பொருளை MyBus- SL என்ற பெயரில் தயாரித்திருப்பதுடன் பேருந்துகளின் GPS பொருத்துவதன் மூலமும் இதனை செயல்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

உலகளாவிய கொவிட் -19 தொற்றுநோய் சூழ்நிலையில் சுகாதார முறைப்படி போக்குவரத்து சேவைகளை வழங்கும் பொறுப்பினை ஏற்று தனியார்துறை பேருந்துரிமையாளர்களுக்கு நிவாரணங்கள் வழங்குதல் மற்றும் புகையிரத நிலையங்கள் மற்றும் பேருந்து முனையங்கள் கிருமி நீக்கம் செய்தல் ஆகிய சுகாதார முறைப்படியான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மக்களுக்கு போக்குவரத்து சேவைகள் தொடர்பில் எந்தவித இடையூறும் இல்லாமல் வழங்குவதற்காக அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ், இணைந்த நிறுவனங்கள் செயல்பட்டன. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட 10 புகையிரத நிலையங்களில் மற்றும் 28 பேருந்துச் சாலைகளில் சுகாதார முறைப்படியான வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு ரூபா 295 மில்லியன் உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் Contingent Emergency Response Component (CERC) கருத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நிலைபேறான போக்குவரத்திற்கு ஏற்றவாறு, பயணிகளுக்கு வசதியான மற்றும் பாதுகாப்பான பொது பேருந்துச் சேவையை வழங்குவதன் மூலம் கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளுக்கு வரும் வாகனங்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட Park and Ride எண்ணக்கரு செயல்முறைப்படுத்தியிருப்பதுடன் பசுமைக்குடில் வாயு உமிழ்வு காரணமாக ஏற்படுகின்ற சுற்றாடல் மாசுபாட்டினைக் குறைப்பதற்கும், பயணக் காலத்தினைக் குறைப்பதற்கும் மற்றும் பயணிகளின் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கும் பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

" சுபீட்சத்தின் நோக்கில்" நாட்டின் போக்குவரத்து பற்றி குறிப்பிட்டுள்ள நடைமுறையை நன்கு அறிந்து கொவிட் தொற்றுநோய் உட்பட பிற சவால்களை எதிர்கொண்டு அடையாளம் காணப்பட்ட அபிவிருத்தி இலக்குகளை உணர்ந்து மக்களுக்கு உயர்தரம் வாய்ந்த மற்றும் வினைத்திறன் வாய்ந்த போக்குவரத்து சேவையை வழங்குவதற்காக இலங்கையின் புகையிரத திணைக்களம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் வீதி பாதுகாப்புக்கான தேசிய சபை ஆகியவை அதிகபட்ச பங்களிப்பை வழங்கியுள்ளன. தற்போதுள்ள சுகாதார வழிகாட்டுதல்களின்படி போக்குவரத்து சேவையை பராமரித்தல் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்வதில் உள்ள சவால்களை எதிர்கொண்டு அபிவிருத்தி இலக்குகளை திட்டமிடப்பட்டவாறு அடைவதற்காக அதிகபட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டாக 2021 ஆம் ஆண்டினைக் குறிப்பிட முடியும்.

1.2 *அமைப்பின் தொலைநோக்கு , பணிக்கூற்று மற்றும் நோக்கங்கள்*

தொலைநோக்கு

இலங்கைப் பிராந்தியத்தினுள்முன்னணி பொதுமக்கள் மையப் போக்குவரத்து திட்டத்தினைக் கொண்ட நாடாகத் திகழச் செய்தல்.

பணிக்கூற்று

பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்ப மூலோபாயங்களை உபயோகித்து மிகவும் உயர் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை செயற்படுத்துதல், மேம்பாடு மற்றும் நிலைபேறாக முன்னெடுத்துச் செல்லுதல்.

நோக்கங்கள்

- பயணிகள், சரக்குப் போக்குவரத்து மற்றும் சுற்றுலா போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.
- பொதுமக்களின் நம்பிக்கை வென்று மோட்டார் வாகன நெரிசல் மற்றும் வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக அட்டவணைக்கமைய போக்குவரத்துச் சேவைகளைக் கொண்டு நடாத்துதல்.
- தாபன கட்டமைப்பை வலுப்படுத்துதல்
- நெடுஞ்சாலைகள் மற்றும் புகையிரத வீதிகளுடன் தொடர்புடைய சுற்றாடல் நட்புறவு மற்றும் பயணிகள் நலனோம்பு குறித்து போக்குவரத்து முறைமையொன்றினை நிறுவுதல்
- 1991 ஆம் ஆண்டு 37 ஆம் இலக்கம் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டம் மற்றும் 1950 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்கம் கொண்ட புகையிரத சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

1.3 *பிரதான செயற்பாடுகள்*

1. "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக மற்றும் அரசினால் நடைமுறைப்படுத்தஎதிர்பார்க்கும் ஏனைய கொள்கைகளின் அடிப்படையில் "வினைத்திறன்மிக்க அத்துடன் சூழல்நேய பொதுப்போக்குவரத்துத் தொகுதியொன்றுக்காக போக்குவரத்து வலையமைப்பை விருத்தி செய்வதற்கு" இராஜாங்கஅமைச்சுக்குரிய கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய போக்குவரத்து எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும்தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடுசெய்தலும்.

    - இலங்கைப் புகையிரதத் திணைக்களம்
    - தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
    - வீதிப்பாதுகாப்புத் தொடர்பான தேசியசபை

2. சூழல்நேய போக்குவரத்து தொகுதியொன்றை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளையும், ஒழுங்குவிதிகளையும் தயாரித்தல்.

3. பொதுப்போக்குவரத்துத் தொகுதியின் மீது மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக உயர்தரத்திலான வீதி வசதிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

4. வீதி நெருக்கடி, பயணிகள் நெருக்கடி மற்றும் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்காக கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டி நெறிகளையும் சட்டதிட்டங்களையும் அறிமுகப்படுத்தல்.

5. அரசாங்கம் மற்றும் தனியார்துறை போக்குவரத்துச் சேவைகளையும், புகையிரதச் சேவைகளையும்பொதுவானதொரு நேரசூசிக்கமைய இணைந்ததொரு திட்டத்தின் கீழ் ஏற்படுகின்ற போக்குவரத்துச் சேவையாகசெயற்படுத்துவதற்குத் தேவையான நவீன தொழில்நுட்ப ஈ-டிக்கட் முறையொன்றை அறிமுகப்படுத்தல்.

6. புகையிரதம் மற்றும் பேரூந்து தரிப்பிடங்களைச் சார்ந்ததாக பொது வசதிகளையும், பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

7. புகையிரத மற்றும் பேரூந்து சேவைக்குத் தேவையான புகையிரதங்கள் மற்றும் பேரூந்துகளை பராமரித்தல்.


8. புகையிரதப் பெட்டிகள் மற்றும் பேரூந்துகள் தயாரிப்பு மற்றும் போக்குவரத்துத்துறைக்குரியதாக உள்நாட்டுகைத்தொழில் தொகுதியொன்றை கட்டியெழுப்புவதற்குத் தேவையான பெறுகை முறைகளை அறிமுகப்படுத்தல்.

9. கொழும்பு அம்பாந்தோட்டை காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு புகையிரதங்கள்மூலம் பொருட்களை கொண்டு செல்வதற்குத் தேவையான வசதிகளை தாபித்தலும் விரிவாக்குதலும்.

10. தகவல் தொழில்நுட்பத்தில் ஈடுபடுவதன் மூலம் மோட்டார் வாகனப் பதிவை மக்கள் நேயமிக்க வினைத்திறமையான அத்துடன் ஊழலற்ற செயல்நெறியாக மாற்றுதல்.

1.4 அமைச்சின் நிறுவன விளக்கப்படம்

போக்குவரத்து அமைச்சு



1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

- இலங்கைப் புகையிரதத் திணைக்களம்

1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

- தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
- வீதிப்பாதுகாப்புத் தொடர்பான தேசியசபை

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (இருப்பின்)

கருத்திட்டத்தின் பெயர்	நிதிசார் மூலகங்கள்		கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டபெறுமதி – (ரூபா. மில்.)	ஒருமித்த செலவு (2021.12.31)	கால எல்லை	பொழிப்பு கருத்திட்ட முன்னேற்றம்	
	உள்நாட்டு / வெளிநாட்டு	நிறுவனம்				%	விபரம்
குருநாகல் - ஹபரண புகையிரத வீதி கருத்திட்டம் (KHRP)	வெ உ	- இ. அ	948 USD.Mn 7,500.00	709.98	2016/09-2023/12	பௌதீக முன்னேற்றம் - 65.2 (அடிப்படை ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் காணி கையகப்படுத்துதல்கள்)	காணி கையகப்படுத்துதல்கள் மற்றும் நஷ்டஈடு செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
போக்குவரத்து கருத்திட்டங்களை ஏற்பாடு செய்யும் வசதி (TPPF)	வெ உ	ADB இ. அ	1,456.50 9,798.50	4,732.52	2018/01-2023/01	42%	உசாத்துணை சேவை நடவடிக்கைகள் 2021 ஏப்ரல் 30 ஆந் திகதியில் முடிவடைந்துள்ளது. மீள குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
புகையிரத வினைத்திறன் மேம்படுத்தும் கருத்திட்டம் (REIP)	வெ உ	ADB இ. அ	28,232.00 5,646.40	2,613.06	2019/09-2025/06	7.7%	கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
மஹவ-ஓமந்தை புகையிரத கருத்திட்டம்	வெ	Exim Bank (India)	91.26 USD.Mn	44.58 USD.Mn	2019.07.18 - 2022.07.18		கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உ - உள்நாட்டு , வெ - வெளிநாட்டு, இ. அ - இலங்கை அரசாங்கம்

அத்தியாயம் 02

போக்குவரத்து துறையில் முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு...

போக்குவரத்து என்பது எந்தவொரு நாட்டினதும் அபிவிருத்திக்காக அத்தியவசியமாக தேவைப்படுகின்ற சேவையாக இருப்பதுடன் மக்களின் வருமானம் மட்டம் உயர்வுடன், போக்குவரத்து சேவையிலும் நிலைபேறான வளர்ச்சி ஏற்பட வேண்டும். பொருளாதார செயற்பாட்டு வளர்ச்சியுடன் ஏற்பட்ட போக்குவரத்துக்கான கேள்வி அதிகரிப்பின் காரணமாக எழுந்துள்ள போக்குவரத்து நெரிசல், வாகன விபத்துக்களில் அதிகரிப்பு மற்றும் சுற்றாடல் மாசுபாடு போன்ற பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு போக்குவரத்து துறையில் காலத்திற்கேற்ற மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் இலங்கையின் போக்குவரத்து துறையை மேம்படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு பல்வேறு கருத்திட்டங்களை / வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை கட்டமைப்பிற்கு ஏற்ப நிலைபேறான போக்குவரத்து துறையின் இலக்குகளை அடைவதற்காக தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் முன்னுரிமைப் துறைகளில் திறம்பட முதலீடு செய்வதன் மூலம் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல், செயல்படுத்தல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கான புதிய தொழில்நுட்பம் , புதிய முகாமைத்துவ கருவிகள் மற்றும் மனித வளத்தினை உச்சளவில் பயன்படுத்த முயற்சித்து வருகின்றது.

அதற்கமைய, பேருந்துகள் மற்றும் புகையிரதங்களை மையமாகக் கொண்டு பொதுமக்களுக்கு வினைத்திறன் மற்றும் இலாபகரமான போக்குவரத்து சேவையொன்றினை வழங்குவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

புகையிரதம் மூலம் பயணிகள் போக்குவரத்தை 5% முதல் 10% வரை அதிகரிக்கும் நோக்கத்துடன் புகையிரத சேவையை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கிய படியாக கொழும்பு புறநகர்ப் பகுதிகளை உள்ளடக்கிய நான்கு பிரதான புகையிரத பாதைகளில் (கடலோர, களனிவெளி, புத்தளம் மற்றும் பிரதான வீதிகள்) வீதி வலையமைப்பை மேம்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தினால் ஆசியா அபிவிருத்தி வங்கி (ADB) கடனின் கீழ் கொழும்பு புறநகர் புகையிரத கருத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன் கருத்திட்டங்களை திட்டமிடும் தொழில்நுட்ப உதவி பெற்றுக்கொள்வதன் கீழ் மொத்தம் 210 கி.மீ நீளத்திற்காக சாத்தியவள ஆராய்ச்சி, விரிவான பொறியியல் திட்டங்கள் மற்றும் பெறுகை ஆவணங்களைத் தயாரித்தல் நிறைவு செய்யப்பட்டிருப்பதுடன், கண்டியின் புறநகர் பகுதியில் புகையிரத பாதை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியவள ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக இந்த கருத்திட்டத்தின் ஏனைய ஆக்கக்கூறுகளான புகையிரத வினைத்திறன் மேம்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் நாடளாவிய தொலைத்தொடர்பு அமைப்பு மற்றும் சூட்டிகை நுழைவுச்சீட்டுக்கள் மற்றும் ஆசன முன்பதிவு முறை ஆகிய நடவடிக்கைகள் தற்போது செயல்பாட்டில் உள்ளன. மேலும், புகையிரத செயல்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் கட்டுமானப் பணிகள் மற்றும் புகையிரத சேமக்காப்பீட்டு பகுதியில் உள்ள அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை மீள்குடியேற்றம் செய்வதற்காக மாலபல்ல வீட்டுக்கட்டிடத்தொகுதி கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

வடபகுதி புகையிரத வீதியின் பயணிகள் மற்றும் சரக்கு சேவைகளை மிகவும் வினைத்திறன் வாய்ந்த முறையிலும் வசதியாகவும் மேற்கொள்ளும் நோக்குடன் 128 கி.மீ. கொண்ட மஹவை- ஓமந்தை இடையிலான பகுதி மேம்படுத்தும் அடிப்படை நடவடிக்கைகள் இப்போதைக்கு ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், இதன் மூலம் புகையிரதத்தின் வேகம் மணித்தியாலத்திற்கு 100 கிலோமீட்டர் வரை அதிகரித்துக் கொள்ள முடியும்.

தனியார் துறையினதும் பங்காண்மையுடன் 200 பயணிகள் புகைவண்டிப் பெட்டிகளின் புனரமைப்புக்கும் கருத்திட்டத்தின் நீட்சியாக மேலும் 100 பயணிகள் புகைவண்டிப் பெட்டிகளின் புனரமைப்புக்கும பணி தொடங்கியுள்ளதுடன், அதில் 6 இன் சோதனை நடவடிக்கைகள் நடைபெற்று வருவதுடன் 24 ஓட்டத்தில் அமர்த்தப்பட்டுள்ளன.

அதேபோன்று, புகையிரதத்தின் மூலம் சரக்கு போக்குவரத்தினை மேம்படுத்துவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கையாக ப்ரீமா கோதுமை மா திருக்கோணமலை இலிருந்து சீதுவை வரை போக்குவரத்து ஆரம்பித்தல், ஹொல்சீம் நிறுவனத்துடன் இணைந்து அருவக்காறு இலிருந்து பூஸ்ஸ வரையில் சுண்ணாம்பு கற்கள் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், தற்போது மேற்கொள்கின்ற பெற்றோலிய எண்ணெய் போக்குவரத்தை பரவலாக மேற்கொள்வதற்காக கொலன்னாலை மற்றும் ஏனைய நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

பேருந்துப் பயணிகள் போக்குவரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பல கருத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பொது போக்குவரத்து பேருந்து சேவைக்கான நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியதன் அடிப்படையில் எளிதான மற்றும் நம்பகமான முன்கொடுப்பனவு அட்டை முறையை அறிமுகப்படுத்துதல், கையடக்கத்தக்க தொலைபேசி மற்றும் இணையத்தினூடாக பேருந்து சேவைகள் பற்றிய தகவல்களை பெறல் மற்றும் ஆசனங்களை முன்பதிவு செய்து கொள்வதற்காக மென்பொருளை தயாரித்தல் மற்றும் MyBus-SL உள்ளீட்டினூடாக பேருந்துகளின் GPS பொருத்துதல்கள் முதலிய நடவடிக்கைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக, மேலும், சமூக நலன்புரி கருத்திட்டமாக வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற சிசுசெரிய, கெமிசெரிய மற்றும் நிசிசெரிய பேருந்து சேவைகள் 2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டதுடன் , அதன்படி சிசுசெரிய 97 புதிய சேவைகளையும், நிசிசெரிய 33 புதிய சேவைகளையும் அறிமுகப்படுததப்பட்டுள்ளது.

தற்போதைய தரவுகளின்படி, வீதி விபத்துக்களால் உயிரிழப்போரின் எண்ணிக்கை வருடத்திற்கு 2500-3000 க்கு இடையில் உள்ளது. அதற்கமைய கிட்டத்தட்ட தினமும் 8 பேர் உயிரிழப்பதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இது ஒரு சமூக பிரச்சினை மற்றுமல்லாது நாட்டின் பொருளாதாரத்திலும் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சமீபத்திய ஆண்டுகளில் ஏற்பட்ட இடரார்ந்த விபத்துக்களுக்கு காரணமான வாகனங்களின் வகைகளைக் வெவ்வேறாக கண்டறியும்போது மோட்டார் சைக்கிள் மூலம் அதிகளவு விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.எனவே, வீதி விபத்தில்லாத சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தில் , கடந்த ஆண்டில் பல்வேறு நடவடிக்கைகள் / விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.அவற்றில், சாலை விபத்துகள் அதிகம் இடம்பெறுகின்ற பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகள் மற்றும் சுற்றியுள்ள 10 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கேற்புடன் "பாடசாலை வீதி பாதுகாப்பு வலயங்களாக" நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடங்குதல், .வீதி விபத்துக்களினால் அதிகம் பாதிக்கப்படும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களின் வாழ்க்கை பாதுகாக்கும் பொருட்டு SLS517 தரத்திலான தலைக்கவசத்தின் முக்கியத்துவத்தையும், மோட்டார் சைக்கிள் ஓட்டும் போது தெரிந்து கொள்ள வேண்டிய காரணங்கள் தொடர்பாகவும் தயாரிக்கப்பட்ட துண்டு பிரசுரங்கள் மூலம் நாடுபூராவும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயல்படுத்துதல். வீதி பாதுகாப்புக்கான தேசிய சபையின் மூலம் 09 மாகாணங்களை உள்ளடக்கியவாறு "மாகாண வீதிகள் பாதுகாப்பு அலகுகள்" மூலம் சாலை வாகன விபத்து கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல். வாகன விபத்துகள் அதிகம் இடம்பெறும் இடங்களில் (Blackspot) மற்றும் நெரிசல் மிக்க இடங்களில் விழிப்பூட்டும் பலகைகள் பொருத்தியிருப்பதைக் குறிப்பிட முடியும்.

இதற்கு மேலதிமாக, 2021 ஆம் ஆண்டில் குற்றவாளிகளை அடையாளம் தெரியாத வீதி விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி வழங்குவதன் கீழ் வீதி விபத்துகளின்போது மோதிவிட்டு தப்பியோடிய நபர்கள் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்காக ஒரு நபருக்கு தலா ரூபா 02 இலட்சம் படி 19 உயிரிழந்தவர்களின் தங்கிவாழ்ந்தவர்களுக்காக ரூபா 3,800,000 செலுத்தப்பட்டிருப்பதுடன் குற்றவாளிகளை அடையாளம் தெரியாத வாகன விபத்துகளால் ஊனமுற்ற நபர்களுக்காக ஒருவருக்கு தலா 100,000 ரூபா வீதம் காயங்களுக்கு ஆளாகிய 26 நபர்களுக்காக 2,575,000 ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் எழுந்துள்ள தொற்றுநோய் சூழ்நிலை மற்றும் பொருளாதார மந்தநிலையில், புகையிரத நிலையங்கள் மற்றும் பேருந்து முனையங்கள் கிருமி நீக்கம் செய்யப்பட்டு, அத்தியாவசிய சேவைகளுக்கு கடமைக்கு வர வேண்டிய மக்களுக்கு எந்தவித இடையூறும்

இல்லாமல் போக்குவரத்து சேவைகள் வழங்கப்பட்டன. அதேபோன்று புகையிரத நிலையங்கள் மற்றும் பேருந்து நிலையங்களிலும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. குறிப்பாக, தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் மற்றும் மாகாண பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் இருந்த சமயங்களில் பேருந்துகள் இடைநிறுத்தப்பட்டதால் பாதிக்கப்பட்ட மாகாணங்களுக்கு இடையேயான தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு மற்றும் மாகாணங்களுக்குள் மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுகின்ற பேருந்துரிமையாளர்களுக்கு அரசாங்க அனுசரணையின் கீழ் வங்கிக் கடன் வழங்கப்பட்டதுடன் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்திற்கான சலுகை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொதுப் போக்குவரத்திற்கு பொதுமக்கள் அதிகமாக ஈர்ப்பது இந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள ஒரு பெரிய சவாலாக இருப்பதுடன், மக்கள் நேய, வசதியான மற்றும் வினைத்திறன் வாய்ந்த போக்குவரத்து சேவையை செயல்படுத்துவதன் மூலம் இதை வெற்றிகரமாக சமாளிக்க முடியும்.

ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் நவீன தொழில்நுட்பம் இந்நாட்டிற்கு பொருத்தமான முறையில் பொதுப் போக்குவரத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். போக்குவரத்து துறைத் தொடர்பான ஆராய்ச்சி அறிவு போக்குவரத்துத் துறைக்கு வழங்குவதற்காக ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பங்குதாரர்களிடையே சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பை உருவாக்குவது இதற்காக மிகவும் முக்கியமாகும்.அதற்காக இப்போதாகும்போது e-mobility மற்றும Intelligent Transport System, அடையாளம் காணப்பட்ட தாழ்வாரங்களில் பல்வித போக்குவரத்து நிலையங்கள் போன்ற சாதகமான நடவடிக்கைகள் தற்போது இந்த நோக்கத்திற்காக திட்டமிடப்பட்டு வருவதுடன் .சரக்கு போக்குவரத்து மற்றும் பல்வேறு வழிகளினூடாக புகையிரத திணைக்களத்தின் வருமானத்தினை அதிகரித்துக் கொள்வதற்காக செயல்திட்டம் தயாரித்துள்ளது. போக்குவரத்து துறையில் முதலீட்டு முன்னுரிமைகளை நிர்ணயித்தல், போக்குவரத்து தேவையினை நிர்வகித்தல் மற்றும் நிலவும் போக்குவரத்து ஊடகங்களில் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு நிகழ்நேர பயணத் தரவுகளை பெறல் மற்றும் அந்தத் தரவுகளை முறைப்படி பகுப்பாய்வு செய்வதும் அவசியமானதாகும். இதற்காக அமைச்சிற்குள் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி அலகினை நிறுவும் பொருட்டு நிதி ஒதுக்கீடுகள் 2022 ஆம் ஆண்டுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டு வரை நடுத்தர கால திட்டமிடலின் கீழ் எதிர்பார்க்கப்படும் அனைத்து நடவடிக்கைகளும் கோவைப்படுத்தப்பட்டுள்ளன, மேலும் அந்த பணிகளை எதிர்காலத்தில் திறம்பட செயல்படுத்துவதறகாக அமைச்சு செயல்பட்டு வருகிறது.

ஆர். டபிள்யு. ஆர். பேமசிரி
செயலாளர்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

அத்தியாயம் 03

2021 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச்செயலாற்றுகை

3.1 நிதிச்செயலாற்றுகைப்பற்றியகூற்று

ஏசீஏ-எப்

2021 டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான நிதிச்செயலாற்றுகைக்கூற்று

ரூபா

வ.செ. திட்டம் 2021		குறிப்பு	உண்மையான 2021	2020	
-	வருமான பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள், சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரி	3	-	-	
-	வரியல்லா வருமானம் மற்றும் பிற	4	-	-	
-	மொத்த வருமான பெறுகைகள் (அ)				
-	வருமானமல்லாத பெறுகைகள்		-	-	
-	திறைசேரி பணிமுற்பணம்		1,319,614,000	11,047,870,204	ஏசீஏ -3
-	வைப்புகள்		34,638,345	13,194,696	ஏசீஏ -4
-	முற்பணக் கணக்குகள்		10,777,675	13,360,288	ஏசீஏ -5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்				
-	மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)		**1,365,030,020**	**11,074,425,187**	
-	மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ = (அ)+(ஆ)		**1,365,030,020**	**11,074,425,187**	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		**49,840,000**	**713,804.75**	

	தேறிய வருமான கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		**1,315,190,020**	**11,073,711,382**	
-	கழி : செலவினம் மீண்டெழும் செலவினம்		-	-	
142,800,000	வேதனாதிகள், சம்பளங்கள், பிற ஊழிய நன்மைகள்	5	130,901,323	141,618,362	
157,450,000	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	123,078,868	146,492,653	
652,000,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	272,548,989	403,809,824	ஏசீஏ -2(ii)
-	வட்டிக்கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டெழும் செலவினம்	9	-	316,653	
952,250,000	மொத்த மீண்டெழும் செலவினம் (ஊ)		**526,529,180**	**692,237,491**	
	மூலதனச்செலவினம்				
11,835,000	மூலதன சொத்துக்களின் புனரமைப்பும், மேம்பாடும்	10	6,640,768	401,458	
5,523,035,000	மூலதன சொத்துக்களின் கொள்வனவு	11	3,092,671,442	8,992,727,539	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ -2(ii)
-	நிதி சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
1,400,000	திறன் மேம்பாடு	14	583,000	381,500	
597,800,000	பிற மூலதன செலவுகள்	15	362,907,047	4,202,109,482	
6,134,070,000	மொத்த மூலதன செலவினம் (எ)		**3,462,802,257**	**13,195,619,979**	
	வைப்புக் கொடுப்பனவு		35,209,348	11,513,727	ஏசீஏ -4
	முற்பணக் கொடுப்பனவு		8,751,349	10,752,832	ஏசீஏ - 5/5(அ)
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவீனம்		-	-	
	மொத்த பிரதான பேரேட்டுச் செலவீனம் (ஏ)		**43,960,697**	**22,266,559**	
	மொத்த செலவினம் ஐ = (ஊ + எ + ஏ)		4,033,292,134	13,910,124,029	
7,086,320,000	டிசம்பர் 31இல் உள்ளவாறு மீதி ஒ=(உ-ஐ)		(2,718,102,114)	(2,836,412,647)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(2,718,102,114)	(2,836,412,647)	ஏசீஏ -7
	பணிமுற்பண மீதி டிசம்பர் 31இல் உள்ளவாறான		-	-	ஏசீஏ -3
			-	-	

3.2 நிதிநிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ - பீ

2021 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு

நிதி நிலைமை பற்றியகூற்று

	குறிப்பு	உண்மையான 2021	2020
		ரூபா	ரூபா
நிதி அல்லாத சொத்துக்கள்			
சொத்து,பொறித்தொகுதி உபகரணம்	ஏசீஏ-6	50,216,541,868	49,524,851,468
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5(ஏ)	29,583,633	31,609,959
காசும் காசு சார்ந்தவையும்	ஏசீஏ-3	-	-
மொத்தசொத்துக்கள்		**50,246,125,501**	**49,556,461,427**
தேறிய சொத்துக்கள்/ உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		27,763,273	29,218,596
சொத்து,பொறித்தொகுதி உபகரண ஒதுக்கு வாடகை, பணி முற்பணஒதுக்கு	ஏசீஏ-5(பீ)	50,216,541,868	49,524,851,468
நடைமுறைபொறுப்புக்கள்			
வைப்புக்கணக்கு	ஏசீஏ-4	1,820,360	2,391,363
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்த பொறுப்புகள்		**50,246,125,501**	**49,556,461,427**

பக்க இல 6 முதல் 57 வரையிலான ஏ.சி.ஏ. வடிவத்தில் எண் 2 முதல் 7 வரைமாதிரிப் படிவங்கள் மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள கணக்கு தகவல் மற்றும் குறிப்புகள் பக்க இல. 58 முதல் 71 வரையில் உள்ளடக்கப்பட்ட கணக்கு குறிப்புகளின் விபரங்களும் இந்த இறுதி நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்ட பகுதிகளாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இறுதிக்கணக்கின் புள்ளிவிவரங்கள், தொடர்புடைய கணக்கியல் குறிப்புகள் மற்றும் பிறகணக்கியல் தகவல்கள் திறைசேரிகணக்கு புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதுடன் இந்த புள்ளி விவரங்களுடன் உடன்படுகின்றன என்பதை, நாங்கள் இதன் மூலம் சான்றளிக்கிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத்தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....	.....
பிரதான கணக்காட்டு அலுவலர்	கணக்கீட்டு அலுவலர்	பிரதான நிதி அலுவலர்/பிரதான கணக்காளர்
பெயர் : ஆர்.டபிள்யு.ஆர். பேமசிரி	பெயர் :	பெயர்:ஏ.ஏ.டீ.கே. அதிகாரி
பதவி: செயலாளர்	பதவி :	திகதி : 2022. 06.09
திகதி :	திகதி :	

R. W. R. Pemasiri
Secretary
Ministry of Transport & Highways
7th Floor,
Sethsiripaya, Stage II,
Battaramulla,

A.A.T.K. Adikari
Chief Financial Officer
Ministry of Transport
7th Floor, Sethsiripaya, (Stage II)
Battaramulla.

3.3 காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ - சீ

2021 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலப்பகுதிக்கான

காசுப்பாய்ச்சல்கூற்று

	உண்மையான	திருத்தப்பட்ட
	2021	2020
	ரூபா	ரூபா
தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்		
மொத்தவரி பெறுகைகள்	-	-
கட்டனம், அபராதம், தண்டப்பணம், உரிமங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானமல்லாத பெறுகைகள்	-	713,805
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	22,726,090	21,090,832
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	1,319,614,000	11,047,156,399
முற்பண அறவீடுகள்	7,560,494	9,468,147
வைப்புக்களின் பெறுகை	34,638,345	13,194,696
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசு (அ)	**1,384,538,929**	**11,091,623,879**
கழி – பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவு	255,438,360	210,632,457
மானியம் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள்	-	-
பிறசெலவின தலைப்புகளுக்கான செலவினம்	8,257,151	8,960,826,508
திறைசேரிக்குசெலுத்தப்பட்ட பணிமுற்பணம்	49,840,000	713,805
முற்பண கொடுப்பனவு	8,263,462	10,752,832
வைப்புத்தொகை செலுத்துதல்	35,209,348	11,513,727
தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசு (ஆ)	**357,008,321**	**9,194,439,329**
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் (இ)= (அ)-(ஆ)	**1,027,530,608**	**1,897,184,550**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்தகாசு		
வட்டி	-	-
பங்கிலாபம்	-	-
உரிமையாண்மை விலகும் ஏற்பாடு மற்றும் பௌதீக சொத்துக்களை விற்பனை செய்தல்	-	-
உப கடன் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டகாசு (ஈ)		
கழி – பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
பௌதிக சொத்து கொள்வனவு அல்லது நிர்மானம் அல்லது வேறு முதலீடுகளை கையகப்படுத்துதல்	1,027,530,608	1,897,184,550

முதலீட்டு செயற்பாட்டுக்காக செலவிடப்பட்ட மொத்த காசு (உ)	1,027,530,608	1,897,184,550
முதலீட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய காசு (ஊ)=(ஈ)-(உ)	(1,027,530,608)	(1,897,184,550)
தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு (எ)=(இ) - (ஊ)	-	-
நிதி செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்		
உள்நாட்டு கடன் பெறுகை	-	-
வெளிநாட்டு கடன் பெறுகை	-	-
பெறப்பட்ட மானியங்கள்	-	-
நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்தகாசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
உள்நாட்டு கடன் பெறுகை மீள்கொடுப்பனவு	-	-
வெளிநாட்டு கடன் பெறுகை மீள்கொடுப்பனவு	-	-
நிதிசெயற்பாடுக்காக செலவிடப்பட்ட மொத்த காசு (ஐ)		
நிதிசெயற்பாடிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (ஒ)=(ஏ)-(ஐ)		
காசில் தேறியமாற்றம் (ஓ) = (எ) -(ஒ)	-	-
சனவரி 01 அன்று ஆரம்ப காசுமீதி	-	-
டிசம்பர் 31 அன்று இறுதி காசுமீதி	-	-

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

-

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூபா,. 000

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமானமதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு%
20.03.99.00	ஏனைய கிடைப்பனவுகள்	2,260	43,674.0	15,356.77	35%
20.02.02.99	அ.ஊ.மு.பி.வட்டி	1,540.0	1,285.43	1,224.55	95%
20.03.03.02	தண்டப்பணம் செலுத்துதல் மற்றும் பறிமுதல்	30.0	100.0	244.65	245%
20.02.01.01	வீட்டு வாடகை	230.34	217.50	185.00	85%

3.6 ஒதுக்கீட்டுப்பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா000,.

ஒதுக்கீட்டுவகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீணடெழும்	955,950,000	952,250,000	526,529,179.78	55.29%
மூலதனம்	5,996,600,000	6,134,070,000	3,462,802,257.23	56.45%

3.7 நீ.பி.குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்டச்செயலகம்/ மாகாணசபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

ரூபா000,.

தொ /இல.	அமைச்சு/ திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டுநோக்கம்	ஒதுக்கீட்டு		உண்மையன செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப்பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
01	குருநாகல் மா/செ	குருணாகல்-ஹபரணை கருத்திட்டத்துக்காக காணிகளை கையகப்படுத்துதல் மற்றும் நிர்வாகச் செலவினங்களை ஏற்பதற்காக	1,678,100	1,678,100	1,671,809.22	99.63%
02	அனுராதபுரம் மா/செ		400,000	400,000	400,000	100%
03	பொலன்னறுவை மா/செ		400,000	400,000	400,000	100%
04	மாத்தளை மா/செ		1,333,200	1,333,200	1,333,200	100%

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா000,.

ஆமன குறியீடு	குறியீட்டுவிபரம்	2020.12.31 திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி	2020.12.31 திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு				
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	** பாராளுமன்றத்திற்குச் சமர்பிக்கும்போது , Computarized Integrated Government Accounting System (CIGAS) உள்ளீட்டின் மூலம் பெற்று கொண்ட அறிக்கை **இணைப்பு 01** மூலம் காட்டப்பட்டுள்ளது.			
9153	காணி				
9154	அருவமானசொத்துக்கள்				
9155	உயிரியல்சொத்துக்கள்				
9160	நடைபெறும் பணிகள்				
9180	குத்தகைசொத்துக்கள்				

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

** பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட இறுதிகணக்காய்வு அறிக்கையினை *(SCAN)* செய்யப்பட்டு இங்கு இணைக்கப்பட வேண்டும் **இணைப்பு – 02** மூலம் காட்டப்பட்டுள்ளது.

அத்தியாயம் 04

செயலாற்றுகை சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத்திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின்சதவீதமாக(%) உண்மையான வெளியீடு		
	100% - 90%	75% - 89%	50% - 74%
புகையிரத பிரிவு			
➢ சரக்கு போக்குவரத்து புகையிரத எண்ணிக்கை			√
➢ தினசரி செயற்படுத்தப்படுகின்ற புகையிரத எண்ணிக்கை		√	
➢ பிரதான புகையிரத கருத்திட்டங்களின் எண்ணிக்கை		√	
➢ நிர்மாணிக்கப்பட்ட புகையிரதவீதி (நீளம் கி.மீ)	√		
பேருந்துப் பிரிவு			
➢ புதிய சிசுசெறிய, கெமிசெறிய, மற்றும் நிசிசெறிய பேருந்து சேவைகளின் எண்ணிக்கை		√	
➢ புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சேவைகளின் எண்ணிக்கை			√
➢ வருடமொன்றுக்கு பயிற்றுவிக்கப்பட்ட பேருந்து பதவியணி எண்ணிக்கை			√
➢ செயல்படுத்தப்பட்ட அட்டவணை எண்ணிக்கை (ஒருங்கிணைந்த மற்றும் ஒருங்கிணைக்கப்படாத)			√
வீதிப்பாதுகாப்புத் தொடர்பான தேசியசபை			
➢ வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையினால் செயல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள்	√		
அமைச்சின் செயலாற்றுகைக் குறிகாட்டி			
➢ மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை			√
➢ பொதுபோக்குவரத்து சேவையினை வினைத்திறனாக்கும் பொருட்டு செயல்படுத்தப்படுகின்றன கருத்திட்டங்களின் எண்ணிக்கை	√		
➢ அலுவலர்களின் இயலளவினை மேம்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ள பயிற்சிகளின் எண்ணிக்கை			√
➢ பாராளுமன்றத்துக்கு வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளின் எண்ணிக்கை	√		
➢ அமைச்சுக்கு கிடைக்கப்பெறும் திறைசேரி நிதிஏற்பாடுகளிலிருந்து செலவு செய்யப்படுகின்ற சதவீதம்	√		
➢ வருடத்துக்குள் பேணப்பட்டுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு எண்ணிக்கை	√		

அத்தியாயம் 05

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக

இலக்கு /குறிக்கோள்	அடைவுகள்	குறிகாட்டிகள்	இதுவரை அடையப்பெற்றமுன்னேற்றம்		
			0% - 49%	50% - 74%	75% - 100%
ஆரோக்கியமான வாழ்க்கையொன்றினை உறுதிபடுத்தி அனைத்து வயதுகளிலுமுள்ள அனைவரினதும் நலனை மேம்படுத்துதல்	2030 ஆம் ஆண்டாகும் போது நெடுஞ்சாலைகளில் விபத்துக்களின் மூலம் இடம்பெறுகின்ற காயங்கள் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையினைக் குறைத்தல்	மரணவிகிதாசாரம்(2019 வருடத்துக்கு நிகராக)	√		
நகரங்கள் மற்றும் குடியிருப்புகள் பூரணத்துவம் பெற்ற, பாதுகாப்பான, வலுவான மற்றும் நிலைத்திருக்கக்கூடியவகையில் தயாரித்தல்	குறிப்பாக இடர்பாடுகள் ஏற்பட முடியுமான நிலைமைகளிலிருக்கும் பெண்கள் , குழந்தைகள் ,மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதியவர்கள் குறித்து விசேடகவனம் செலுத்தப்பட்டு நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பினை மேம்படுத்துதல்,பொது, 2030 போக்குவரத்து முறைமை கணிஷமானவில் விஷ்தரிப்பதன் மூலம் 2030 ஆம் ஆண்டாகும் போது அனைவருக்கும் பாதுகாப்பான குறைந்தவிலைக்கு பெற்றுக் கொள்ளமுடியுமான அணுகக்கூடிய மற்றும் நிலைப்பேறான போக்குவரத்து முறைமையை வழங்குதல்.	1. சரக்குப் போக்குவரத்து புகையிரத எண்ணிக்கை		√	
		2.தினசரி போக்குவரத்து செய்கின்ற புகையிரத எண்ணிக்கை			√
		3.பிரதான புகையிரத கருத்திட்டங்களின் எண்ணிக்கை			√
		4.புதிய சிசுசெறிய, கெமிசெறிய, மற்றும் நிசிசெறிய பேருந்து சேவைகளின் எண்ணிக்கை			√

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் சாதனைகள் மற்றும் சவால்கள்

2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2030 நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக ஒட்டுமொத்த அபிவிருத்திக்கு பயனுறுதி வாய்ந்த முறையில் பங்களிப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு அளவுரீதியான மற்றும் தரமான வலுவான போக்குவரத்து சேவையை ஏற்படுத்துவதற்காக போக்குவரத்து அமைச்சு ஏற்கனவே பல நடவடிக்கைகளை

எடுத்துள்ளது. நிலைபேறான அபிவிருத்தி நோக்கத்திற்குள் பல இலக்குகளுக்காக போக்குவரத்துத் துறையானது நேரடியாகப் பங்களிப்பை வழங்கி வருவதுடன் ஏனைய பல துறைகளின் இலக்குகளுக்காக மறைமுகமாகப் பங்களிக்கிறது. இதன்படி, நோக்கங்கள் 3,9 மற்றும் 11ன் கீழ் போக்குவரத்து துறைக்கு நேரடியாக உரிய இலக்குகளை அடையாளம் காண முடியும்.

11 ஆம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

11.2 இடர்பாடுகளுக்கு ஆளாகும் நிலையிலுள்ள பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், மற்றும் முதியோர் மீது சிறப்பு கவனம் செலுத்தி நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பை மேம்படுத்துதல், பொதுப் போக்குவரத்து முறைமைகள் குறிப்பிடத்தக்க அளவில் விரிவாக்கம் செய்வதன் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் பாதுகாப்பான மலிவு விலையில் பெறக்கூடிய அணுகக்கூடியவாறான மற்றும் நிலைபேறான போக்குவரத்து முறைமையை வழங்குதல்

- வசதி குறைந்த பகுதிகளில் வாழுகின்ற மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு சமூக நலன்புரி பேருந்து சேவைகளாக "சிசுசெரிய", "கெமிசெரிய" மற்றும் "நிசிசெரிய" சேவைகள் வெற்றிகரமாக செயல்படுத்துதல். அதற்கமைய சிசுசேரியா 97 புதிய சேவைகளையும், நிசிசெரியா 33 புதிய சேவைகளையும் 2021 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.சிசுசெரிய மூலம் பாடசாலை சிறார்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான பொது போக்குவரத்து பேருந்து சேவையை வழங்கி வருவதுடன் கெமிசெரிய சேவை, நகரத்திலிருந்து வெகு தொலைவில் வசிக்கும் மக்களுக்கு வசதியாக செயல்படுத்தப்படுவதுடன், நிசிசெரிய சேவை இரவு மற்றும் விடியற் காலை போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக செயல்படுத்தப்படுகின்றது.

9 ஆம் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

9.1 பொருளாதார அபிவிருத்தி மற்றும் மானிட நல்வாழ்வை மையமாகக் கொண்டு அனைவருக்கும் பெறக்கூடியவறான மற்றும் அணுகக்கூடியதாகவும் உள்ளதை கவனத்திற் கொண்டு பிராந்திய மற்றும் தேசிய எல்லைகளில் மேற்கொள்ளப்படுகின்ற உட்கட்டமைப்பையும் உள்ளடங்களாக உயர்தர, நம்பகமான, நிலையான மற்றும் இடர்பாடுகளை தாங்கும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

- தற்போதுள்ள புகையிரத வலையமைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் தற்போதுள்ள வலையமைப்பை மேம்படுத்துவதற்கான கருத்திட்டம்

- மாத்தறை - கதிர்காமம் புகையிரத வீதிக் கருத்திட்டம், குருநாகல் ஹபரணை புகையிரத வீதிக் கருத்திட்டம், மஹவையிலிருந்து ஓமந்தை வரையிலான புகையிரத வீதி புனரமைப்புக் கருத்திட்டம் மற்றும் கொழும்பு புறநகர் புகையிரத வீதிக் கருத்திட்டம்

- புகையிரத தொகுதியினை வலுப்படுத்துவதற்காக புதிய புகையிரத தொகுதிகளை கொள்வனவு செய்தல், பயணிகள் புகைவண்டிப் பெட்டிகள் புனரமைப்பு மற்றும் புகையிரத தொகுதியின் தொடர்வாரியான பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- பயணிகளுக்கான வசதி மற்றும் பாதுகாப்பிற்காக முன்னுரிமை அளித்து புகையிரதத்திற்கு பிரவேசித்தல் மற்றும் வெளியேறுவதற்கு வசதியாக மேடைகளை உயர்த்துதல் மற்றும் நீட்டிப்பு வேலைகளைச் செய்தல் மற்றும் விசேட தேவைப்பாடுகளைக் கொண்ட நபர்களுக்காக அணுகலை விரிவுபடுத்துதல்.

- பயணிகள் போக்குவரத்து ஒழுங்குமுறை நிறுவனமான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் செயல்பாடுகள் தன்னியக்க முறைக் கருத்திட்டத்தினூடாக பொதுமக்களுக்கு விரைவான சேவையொன்றினை வழங்குதல் அதற்கமைய, 2021 வருடத்தில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்துக்கு பதிலாக NFC அட்டையொன்றினை வெளியிடுதல்
- தூர பயண சேவைகள் புகையிரத மற்றும் பேருந்துகளின் ஆசனங்கள் நிகழ்நிலை முறையில் ஒதுக்கீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

3 ஆம் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

3.6 2030 ஆகும்போது நெடுஞ்சாலைகளில் ஏற்படுகின்ற விபத்துக்களால் ஏற்படும் காயங்கள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்.

சாலை விபத்துக்களால் தினமும் 8 பேர் உயிரிழப்பதாக அறிக்கையிடப்பட்டிருப்பதுடன் தொழிற்படையைச் சேர்ந்த வயதுடையவர்களே பெரும்பாலும் விபத்துகளால் மரணம் அல்லது அங்கவீனமடைகின்றனர். இது நாட்டின் பொருளாதாரதைப் போன்று சமூக ரீதியாகவும் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, வீதி விபத்துக்களை குறைத்து நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகளையெடுப்பதை முன்னுரிமையாகக் கருதி போக்குவரத்து அமைச்சின் மூலம் நடவடிக்கையெடுக்கப்படுகின்றது.

- வீதி பாதுகாப்பு தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பாடசாலை அண்டிய பிரதேசங்களில் பாதுகாப்பு வலயங்களை நிறுவுவதன் கீழ் விபத்து அதிகம் ஏற்படுகின்ற பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கி, முதற்கட்டமாக 08 மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 10 பாடசாலைகளில் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
